**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. M. அபிநயா, B.A.B.L., (FAC)**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மே மாதம் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் வைகாசி திங்கள் 16-ம் நாள்**

**CC. No.427 of 2025**

**(CNR No.TNVP10-1885-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.427/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ரோஷணை காவல் நிலையம்,<br>குற்ற எண். 263/2023,<br>பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act |
| 3 | எதிரியின் விவரம் | | அருள்முருகன், வயது 26,<br>த/பெ கன்னியப்பன்,<br>பள்ளிக்கூட தெரு,<br>தீவனூர் கிராமம்,<br>திண்டிவனம் வட்டம். |
| 4 | சம்பவ தேதி | : | 10.09.2022 |
| 5 | முறையீடு | : | 10.09.2022 |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | 10.09.2022 to 19.09.2022 = 10 days |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 14.08.2025 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 04.02.2026 |

ABINAYA Digitally signed by ABINAYA
Date: 2026.05.29 06:17:21 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 25.05.2026 | 25.05.2026 |
| | | | PW-2 | 25.05.2026 | 25.05.2026 |
| | | | PW-3 | 25.05.2026 | 25.05.2026 |
| | | | PW-4 | 25.05.2026 | 25.05.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி) BNSs ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 26.05.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act-ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ | | |

இவ்வழக்கானது கடந்த 14.08.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:17:29 +0530

எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 26.05.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.அஜீஸ், B.A. L.L.B., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழுங்கும்.,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

கடந்த 10.09.2022 ம் தேதி நள்ளிரவு 1.00 மணிக்கு ரோஷணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தீவனுர் பள்ளிக்கூட தெருவில் சாட்சி .1 குப்பு சாட்சி -2 மூர்த்தி, சாட்சி -3 கோவிந்தம்மாள் ஆகியோர்கள் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது எதிரி அருள்முருகன் என்பவர் சாட்சி -1 ன் வீட்டின் கதவை தட்டி வெளியே வந்த சாட்சிகள் 1,2,3 ஆகியோர்களை அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த மூங்கில் தடியால் ஓங்கி வலது தோள்பட்டையில் அடித்துஇனிமேல் தன்னிடம் வைத்துக்கொண்டால் இதுதான் கதி என்று மூங்கில் தடியை காட்டி மிரட்டி குற்றம் புரிந்ததாக எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act – ன்படியும் ரோஷணை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது எதிரி மீது பிரிவுகள்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:17:35 +0530

294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230-BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4)** வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

- பாதிக்கப்பட்ட மற்றும் நிகர் நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும் அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 புகாரில் உள்ள விவரம் தெரியாது என குறிப்பிட்டுள்ளார்

- பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 தன்னை யார் எதற்காக தாக்கினார்கள் என்று தனக்கு தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார் .

ABINAYA Digitally signed by ABINAYA
Date: 2026.05.29 06:17:41 +0530

- ➔ கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 சம்பவம் குறித்து எந்த விவரமும் தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார் .
- ➔ கூடுதல் சாட்சியான அ.சா.4 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் BNSS படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10)அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.4 சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சாட்சிகள் மூலமாக எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டதால் தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:17:52 +0530

11. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முரண்பட சாட்சியம் அளித்துள்ளார். மற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

**பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திருமதி. குப்பு** அவரது சாட்சியத்தில் எதிரி அருள்முருகன் தனது எதிர் வீட்டை சேர்ந்தவர் எனவும், பட்டியல் சாட்சி - 2 மூர்த்தி தனது கணவர் எனவும், பட்டியல் சாட்சி -3 கோவிந்தம்மாள் தன்னுடைய அம்மா எனவும், 2022 ம் வருடம் ஒரு நாள் அதிகாலை 1.00 மணிக்கு தீவனூர் கிராமத்தில் பள்ளிக்கூட தெருவில் உள்ள தன்னுடைய வீட்டில் தானும், தனது கணவரும், தனது அம்மாவும் தூங்கிக்கொண்டிருந்ததாகவும், அப்பொழுது யாரோ வீட்டு கதவை தட்டிய சத்தம் கேட்டு தானும், தனது கணவரும் வெளியே வந்து பார்த்ததாகவும், அங்கு நிறைய நபர்கள் கும்பலாக சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் எனவும், தன் கணவர் என்னவென்று வெளியே சென்று பார்த்தபொழுது அவரை யாரோ தள்ளிவிட்டார்கள் எனவும், கீழே விழுந்ததில் தனது கணவருக்கு வலது தோள் பட்டையில் அடிபட்டது எனவும், கணவரை பார்ப்பதற்காக தான் வேமாக சென்றபொழுது தன் இடது காலில் தடுக்கி அதில் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், கும்பலாக சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்கள் யார் என்று தனக்கு தெரியாது எனவும், தன் கணவரை யார் எதற்காக தாக்கினார்கள்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:17:58 +0530

என்று தனக்கு தெரியாது எனவும், சிகிச்சைக்காக தானும், தனது கணவரும் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும், பின்பு மேல் சிகிச்சைக்காக தனது கணவர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார் எனவும், அங்கு வந்த ரோஷணை காவல் நிலைய போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் புகாரில் கையொப்பம் செய்ததாகவும், அதில் என்ன எழுதி உள்ளது என்று தனக்கு தெரியாது எனவும், வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விவரமும் தனக்கு தெரியாது எனவும், போலீசார் தன்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

13. பாதிக்கப்பட்ட சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு.மூர்த்தி** அவரது சாட்சியத்தில் அ.சா.1 தனது மனைவி எனவும், பட்டியல் சாட்சி - 3 கோவிந்தம்மாள் தனது அக்கா எனவும், எதிரி அருள்முருகன் தனது எதிர் வீட்டை சேர்ந்தவர் எனவும், 2022 -ம் வருடம் ஒரு நாள் அதிகாலை 1.00 மணிக்கு தீவனூர் கிராமத்தில் பள்ளிக்கூட தெருவில் உள்ள தன்னுடைய வீட்டில் தானும், தனது மனைவியும், தன் அக்காவும் தூங்கிக் கொண்டிருந்ததாகவும், அப்பொழுது யாரோ வீட்டு கதவை தட்டிய சத்தம் கேட்டு தானும், தனது மனைவியும் வெளியே வந்து பார்த்ததாகவும், அங்கு நிறைய நபர்கள் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் எனவும், தான் என்னவென்று வெளியே சென்று பார்த்தபொழுது தன்னை யாரோ தள்ளிவிட்டார்கள் எனவும் கீழே விழுந்து தனக்கு வலது தோள் பட்டையில்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:18:04 +0530

அடிபட்டது எனவும், தன்னை பார்ப்பதற்காக தனது மனைவி வேகமாக வந்தபொழுது அவருடைய இடது காலில் தடுக்கி அதில் தனது மனைவிக்கு காயம் ஏற்பட்டதாகவும், கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் எனவும், யார் என்று தனக்கு தெரியாது எனவும், தன்னை யார் எதற்காக தாக்கினார்கள் என்று தனக்கு தெரியாது எனவும், சிகிச்சைக்காக தானும் தனது மனைவியும் திண்டிவனம் அரசுமருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும், பின்பு மேல் சிகிச்சைக்காக தன்னை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

14. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திருமதி.கோவிந்தம்மாள்** அவரது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகள் எனவும், அ.சா.2 தனது தம்பி, எதிரி அருள்முருகன் தனது எதிர் வீட்டை சேர்ந்தவர் எனவும், இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விபரமும் தனக்கு தெரியாது எனவும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

15. **இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக அ.சா.4 திரு. ஆனந்தன் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 10.09.2022 ம் தேதி 12.00 மணிக்கு உதவி ஆய்வாளர் சின்னசாமி நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 குப்பு என்பவர்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:18:10 +0530

நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று ரோஷணை காவல் நிலைய குற்ற எண்.263/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) & section 4 of TNPWHAct ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார் எனவும், பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 12.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயபால் மற்றும் அய்யனார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் எனவும், பின்னர் 13.30 மணிக்கு சம்பவ இடமான வாதியின் வீட்டின் முன்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 99.5 செ.மீ நீளமுள்ள மூங்கில் தடி கைப்பற்றப்பட்டது எனவும், பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் எனவும், வழக்கின் சம்பவ சாட்சிகளான குப்பு, மூர்த்தி, கோவிந்தம்மாள், சிவகாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் எனவும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வர எதிரியை தேட எதிரியானவர் அன்றைய தினமே 15.00 ணிக்கு தீவனூர் பேருந்து நிலையம் அருகே நின்றிருந்தவரை காரணம் கூறி கைது செய்து 15.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து பாராவசம் ஒப்படைத்துள்ளார் எனவும், பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட அ.சா.1 குப்பு என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த திண்டிவனம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் சுபாஷினி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று பெற்றுள்ளார் எனவும், பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323,324, 506(2), பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்படி குற்ற

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:18:21 +0530

இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. கடந்த 10.09.2022 ம் தேதி நள்ளிரவு 1.00 மணிக்கு ரோஷணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தீவனுர் பள்ளிக்கூட தெருவில் சாட்சி .1 குப்பு சாட்சி -2 மூர்த்தி, சாட்சி -3 கோவிந்தம்மாள் ஆகியோர்கள் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது எதிரி அருள்முருகன் என்பவர் சாட்சி -1 ன் வீட்டின் கதவை தட்டி வெளியே வந்த சாட்சிகள் 1,2,3 ஆகியோர்களை அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த மூங்கில் தடியால் ஓங்கி வலது தோள்பட்டையில் அடித்து தடியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு வழக்காகும்.

17. பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தில் சம்பவ சமயத்தில், சம்பவ இடத்தில் தான் வேமாக சென்றபொழுது தனது இடது கால் தடுக்கி கீழே விழுந்ததால் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், சம்பவ இடத்தில் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் யார் என்று தனக்கு தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். காயம்பட்ட நபரான அ.சா.2 திரு.மூர்த்தி சம்பவ தினத்தன்று சம்பவஇடத்தில் யாரோ தள்ளிவிட்டதால் தனக்கு வலது தோள் பட்டையில் அடிபட்டதாகவும், சம்பவ இடத்தில் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் யார் என்று தனக்கு தெரியாது எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியான

ABINAYA Digitally signed by ABINAYA
Date: 2026.05.29 06:18:30 +0530

அ.சா.3 திருமதி. கோவிந்தம்மாள் வழக்கு சம்மந்தமாக தனக்கு எந்த விபரமும் தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் அ.சா.4 குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறியுள்ளார். எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரி அருள்முருகன் என்பவர் சாட்சிகள் 1,2,3 ஆகியோர்களை அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த மூங்கில் தடியால் ஓங்கி வலது தோள்பட்டையில் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள்படியாக எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act- ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**19. இறுதியாக, எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 506(2), section 4 of TNPWH Act- ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:18:38 +0530

20. இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.152/2024 ல் கண்டுள்ள சுமார் 99.5 செ.மீ நீளம் கொண்ட மூங்கில் தடி - 1 மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மே திங்கள் 29 -ம் வெள்ளிக்கிழமை 2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்து.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:18:45 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம். (மு.கூ.பொ)

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.குப்பு | பாதிக்கப்பட் சாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.மூர்த்தி | காயம்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திருமதி.கோவிந்தம்மாள் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.ஆனந்தன் காவல் உதவி ஆய்வாளர் | கூடுதல் சாட்சி |

**<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | ------- | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் | அ.சா. 1 |
| அ.சா.ஆ.2 | 10.09.2022 | புகார் மனு | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | 10.09.2022 | முதல் தகவல் அறிக்கை | அ.சா. 4 |
| அ.சா.ஆ.4 | 10.09.2022 | பார்வை மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 10.09.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 10.09.2022 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | 10.09.2022 | படிவம் - 91 (சி.பி.நெ.152/2024) | அ.சா.4 |
| அ.சா.ஆ-8 | 10.09.2022 | அ.சா.2 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.4 |

**<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்</u>**:-

அ.சா.பொ.1 - சுமார் 99.5 செ.மீ நீளம் கொண்ட மூங்கில் தடி - 1

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**:-இல்லை

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.05.29 06:18:54 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம். (மு.கூ.பொ)